பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 03 2024 **SUNDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2. தேர்தல் நன்கொடைகளை வெளிப்படைத்தன்மையுடன் பெற்று வருவதாக திமுக கூறியுள்ளது.
3. போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
4. மக்கள் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக தெரிவித்துள்ளது.
5. பாரிஸ் பாராலிம்பிக் **Taekwondo** போட்டியில் பங்கேற்க இந்தியாவின் **Aruna Tanwar** தகுதி பெற்றுள்ளார்.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<<>>>>>>>

நாடுமுழுவதும் மக்களவைத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 96 கோடியே 88 லட்சம் பேர் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

19 கோடியே 74 லட்சம் இளையோர் வாக்காளர்கள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும், இதில் ஒரு கோடியே 84 லட்சம் பேர் முதல் முறை வாக்காளர்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

88 லட்சத்து 35 ஆயிரம் மாற்று திறன் கொண்டவர்களும், 85 வயதை பூர்த்தி செய்த 82 லட்சம் பேரும், 100 வயதை பூர்த்தி செய்த 2 லட்சத்து 18 ஆயிரம் பேரும் வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

வாக்காளர்கள் அனைவரும் தங்களது ஜனநாயக கடமையை தவறாமல் நிறைவேற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்காக, நாடு முழுவதும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரயில்வே, பெட்ரோலியம் மற்றும் அஞ்சல் துறைகளுடனும், வங்கிகள் கூட்டமைப்புடனும் இணைந்து இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக, வருமானவரித்துறை 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்தியுள்ளது.

எந்தவொரு கட்சியோ, தனி நபரோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ பணம் மற்றும் இலவசப்பொருட்களை விநியோகம் செய்வது தொடர்பான புகார்களை தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண்ணும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1 8 0 0 - 4 2 5 - 6 6 6 9 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்புகொண்டு புகார்களை தெரிவிக்கலாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**tn.electioncomplaints2024@incometax.gov.in** என்ற மின்னஞ்சல் மூலமாக புகார்களை தெரிவிக்கலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, 9 4 4 5 3 – 9 4 4 5 3 என்ற வாட்ஸ்அப் எண்ணிலும் புகார்களை தெரிவிக்கலாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பறக்கும் படையினர் வாகன சோதனைகளில் ஈடுபட்டு கண்காணிப்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் நான்கு பிரிவுகளின்கீழ் தனிப்படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஆட்சியர் திரு தீபக் ஜேக்கப் தெரிவித்தார்.

இதற்கிடையே, மக்களவைத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதை ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருப்பதாக ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<<<<<>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றியிருப்பதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, நாளேடுக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், மகளிர் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

தேர்தல் நன்கொடைகளை திமுக வெளிப்படைத்தன்மையுடன் பெற்று வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருள் பிரச்சினை மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்கும் என்று கூறினார்.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு அண்ணாமலை நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

மக்கள் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டுள்ளது.

விவசாயிகள் நலனுக்காக 50 ஆயிரம் இலவச மின் இணைப்புகள் தட்கல் முறையில் வழங்கியது அஇஅதிமுக ஆட்சி காலத்தில்தான் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த இந்த மீனவர்களை, சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே காட்டுத் தீயை அணைக்கும் பணிகள் ஆறாவது நாளாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விமானப்படை ஹெலிகாப்டரும் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் நடைபெற்றது.

---------------

திண்டுக்கல் மாவட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம் ஆட்சியர் திருமதி பூங்கொடி தலைமையில் நடைபெற்றது.

--------------

திருச்சி மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---------------

திருவாரூர் மாவட்டம் தியாகராஜர் திருக்கோவில் ஆழித்தேர் திருவிழா 21-ஆம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு, திருவாரூர் நகர் பகுதிகளில் செயல்படும் டாஸ்மாக் மதுக்கடைகள், மதுக்கூடங்கள் மற்றும் தனியார் மதுக்கடைகளுக்கு அன்றைய தினம் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோவில் திருக்கல்யாண உற்சவம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. முக்கிய நிகழ்ச்சியான ஸ்ரீ ஆண்டாள் ரெங்கமன்னார் திருக்கல்யாணம் 25-ஆம் தேதி நடைபெறும்.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் **Taekwondo** போட்டியில் பங்கேற்க இந்தியாவின் **Aruna Tanwar** தகுதி பெற்றுள்ளார்.

சீனாவின் **Taian** —வில் நடைபெற்ற இதற்கான ஆசிய தகுதிச்சுற்று போட்டியில் வெற்றிபெற்றதையடுத்து அவர் பாராலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

--------------------

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gulveer Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார். ஆடவர் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

புதுதில்லி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 6-2, 6-2 என்ற செட் கணக்கில், மற்றொரு இந்திய வீரரான கரன் சிங்கை வென்றார்.

**<<<<<<<<END>>>>>>>**